# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**11-11-2022**

**Wesite Link** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**Faceook Link** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. **11-11-22**
   - ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 11, 2008 முதல், **தேசிய கல்வி தினமாக** கொண்டாடப்படுகிறது.
     - ✓ இந்தியாவின் முதல் கல்வி மந்திரி மவுலானா அபுல் கலாம் ஆசாத், 1947 ஆகஸ்ட் 2, 1958 முதல் 2 பிப்ரவரி 1958 வரை பணியாற்றினார்.
     - ✓ அப்துல் கலாம் ஆசாத்தின் பிறந்த நாள் நவம்பர் 11 அன்று கொண்டாடப்படுகிறது.

## மத்திய செய்திகள்

1. **சூரிய எரிசக்தி மூலம் ரூ.32,000 கோடி சேமிப்பு**
   - சூரிய எரிசக்தி பயன்பாட்டின் மூலம் நடப்பாண்டின் முதல் 6 மாதங்களில் சுமார் ரூ.32,000 கோடியை இந்தியா சேமித்துள்ளதாக ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
   - இந்தியாவிலும் சர்வதேச அளவிலும் சூரிய எரிசக்தி பயன்பாடு குறித்து எரிசக்தி - தூய காற்று ஆராய்ச்சி மையம், எரிசக்தி பொரு ளாதார மையம் ஆகியவை சார்பில் ஆய்வு நடத்தப்பட்டது.
   - அந்த ஆய்வறிக்கையில், "நடப்பு 2022-ஆம் ஆண்டின் ஜனவரி முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில் சூரிய எரிசக்தியைப் பயன்படுத்தியதன் மூலம் இந்தியா சுமார் ரூ.32,000 கோடி மதிப்பிலான கச்சா எண்ணெய் பயன்பாட்டைத் தவிர்த்துள்ளது.
   - சுமார் 1.91 கோடி டன் நிலக்கரி பயன்பாட்டின் தேவையையும் இந்தியா தவிர்த்துள்ளது.
   - கடந்த தசாப்தத்தில் சூரிய எரிசக்தியை அதிகமாகப் பயன்படுத்திய 10 நாடுகளில் 5 நாடுகள் ஆசியாவைச் சேர்ந்தவை.
   - இந்தியா, சீனா, ஜப்பான், தென் கொரியா, வியட்நாம், பிலிப்பின்ஸ், தாய்லாந்து ஆகிய நாடுகள் சூரிய எரிசக்தியை அதிகமாகப் பயன்படுத்தி வருகின்றன.
   - இதன் மூலமாக அந்நாடுகள் 6 மாதங்களில் சுமார் ரூ.2.72 லட்சம் கோடியை சேமித்துள்ளன.
   - **சீனா** மட்டும் சுமார் ரூ.1.68 லட்சம் கோடியை சேமித்துள்ளது. இதன் மூலமாகப் பெருமளவிலான நிலக்கரி, இயற்கை எரிவாயு இறக்குமதியை சீனா குறைத்துள்ளது.
   - ஜப்பான் **இரண்டாவது இடத்தில்** உள்ளது.

2. **10 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆதார் புதுப்பிப்பு அவசியம்**

- ஆதார் பதிவு செய்த நாளில் இருந்து ஒவ்வொரு 10 ஆண்டுக்கும் குறைந்தபட்சம் ஒருமுறையாவது தங்களது அடையாளச் சான்று முகவரி உள்ளிட்ட விவரங்களைப் புதுப்பிப்பதை அவசியமாக்கும் வகையில் ஆதார் ஒழுங்குமுறை விதிகளில் மத்திய அரசு திருத்தம் செய்துள்ளது.
- நாட்டில் இதுவரை 134கோடி ஆதார் அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

## ஒப்பந்தம்

### 1. தேசிய முதலீடு, உள்கட்டமைப்பு நிதியம் ஜப்பான் வங்கி இடையே ஒப்பந்தம்

- இந்தியாவில் ஜப்பான் நிறுவனங்ககளின் முதலீட்டை அதிகரிக்கும் வகையில் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கியுடன் ( ஜேபிஜசி) புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதாக மத்திய அரசு அறிவிப்பு வெளியிட்டுள்ளது.
- தேசிய முதலீடு மற்றும் உள் கட்டமைப்பு நிதியத்துக்கும் ( என்ஐஐஎஃப்) சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பான் வங்கிக்கும் இடையே இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.
- இந்தியாவில் உள்கட்டமைப்பு சார்ந்த முதலீட்டை ஊக்குவிக்கும் வகையில், **2015-ம்** ஆண்டு மத்திய அரசு தேசிய முதலீடு மற்றும் உள்கட்டமைப்பு நிதியத்தை உருவாக்கியது குறிப்பிடத்தக்கது.